# පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක - 492

**ආයතනයේ නම - දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

# பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் .492

**நிறுவனத்தின் பெயர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

# Parliamentary Series No. 492

**Name of the Institution - District Secretariat, Jaffna**

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119(4)

**நிலையியற் கட்டளை இல 119(4) இன் கீழ் அரச கணக்குகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

**பாராளுமன்ற கூட்டத் தொடர் இலக்கம் - 492**
**நிறுவனத்தின் பெயர் - மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.**

| இல | அரச கணக்குகள் குழுவினால் அடையாளங்காணப்பட்ட குறைபாடுகள் | அடையாளங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதையநிலை |
|---|---|---|
| 01 | உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை. | தற்போது எவ்வித காலதாமதமின்றி உள்ளகக் கணக்காய்வு அவதானிப்பிற்கான பதில்கள் உரிய காலத்தில் வழங்கப்பட்டு வருகின்றது |
| 02 | அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கப்பட்டவர்களைத் தவிர அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட் தொகுதியினர் இணைக்கப்பட்டு அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள். | (see table below) மூன்றாம் நிலையில் தொழில்நுட்ப சேவை உத்தயோகத்தர்கள் இருவர் மேலதிகமாக காணப்படுவது தொடர்பான விபரங்கள் Misco இல் இணைப்பு II இல் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.<br>முதலாம் நிலையில் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2016 முதல் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் உள்ளடக்கப்பட்டு இவர்கள் பணியிலிருக்கும் வரை (Personal to holder) என அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஆரம்ப நிலையில் காணப்படும் மேலதிக ஆளணியை (Personal to holder) அலுவலகப் பணியாளர் சேவை ஆளணியில் உள்ளீர்ப்புச் செய்வதற்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கோரிக்கைக்கமைய மாதிரி சேவைக் குறிப்பு தயாரித்து அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 03 | மாவட்ட விலை நிர்ணய குழு கூட்டங்கள் மாதந்தோறும் நடைபெறவில்லை. | 2023ம் ஆண்டு கட்டுமானங்களின் விலைகளில் மாறுபாடு ஏற்படாது ஒரு நிலையான தன்மை காணப்பட்டமையினால் 17.01.2023, 20.06.2023 ஆகிய தினங்களில் இரு கூட்டங்கள் இடம்பெற்றன.பொது |

Table within item 02:

| | அலுவலர்களின் எண்ணிக்கை | மேலதிகம் |
|---|---|---|
| 1 | சிரேஸ்ட நிலை | - |
| 2 | 3ம் நிலை | 02 |
| 3 | 2ம் நிலை | |
| 4 | 1ம் நிலை | 04 |
| | மொத்தம் | 06 |

| | | |
|---|---|---|
| | | நிருவாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 03/2025 ம் இலக்க 2025.09.01 ம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் தற்போது இவ்வாண்டின் முதல் மாத்ததில் மாவட்ட விலை நிர்ணய குழு கூட்டம் இடமபெற்றுள்ளது. |
| 04 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற / பாதகமான மட்டத்தில் நிலவியது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட பெரும்பாலான அவதானிப்புக்கள் சீர் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனையவற்றை சீர் செய்வதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 05 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறிப்பிடப்பட்ட விதப்புரைகளில் 80% வீதத்திற்கு மேற்பட்ட விதப்புரைகள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய விதப்புரைகளினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. |
| 06 | அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை. | பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு உட்பட்ட உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றமானது அரசாங்க அதிபரால் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் ஏனைய அமைச்சுகளிற்குட்பட்ட 5 வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்கள் அந்தந்த அமைச்சுகளினால் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அவ்விபரங்கள் எம்மால் பொது நிர்வாக அமைச்சின் ஊடாக குறித்த அமைச்சுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

**செ.கிருபாகரன்,**
பிரதம கணக்காளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

S.Kirupakaran
Chief Accountant
For Goverment Agent/ District Secretary
District Secretariat,
Jaffna

**ம.பிரதீபன்,**
மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

M.Piiratheepan
Government Agent/District Secretary
Jaffna District

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.